## தலைப்பு 206 – கலாச்சார அலுவல்கள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 206 – கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தித் தொடர்பு** | **செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை** | **இந்த அறிக்கையின் பந்தித் தொடர்பு** |
|---|---|---|
| 1.2.1 | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லா சொத்துக்களையும் இனங்கண்டு கிரயத்தை அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது கணக்கீடு செய்ய வேண்டும் | 1.6.1(ஆ)(i) |
| 1.2.2 (அ)(i) | முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது திறைசேரி கணனி அறிக்கை பிரகாரம் மீதியில வித்தியாசம் இருப்பின் அவ் வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1.6.1(அ) |
| 3.2.4. iv | ஒப்பந்ததாரருக்கு மீண்டும் செலுத்திய தாமதக் கட்டணத்தை மீள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2.5. i |

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதியன்று முற்பண பீ கணக்கின் வரவு மீதி | இவ் வித்தியாசம் 20 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து நிலவிவருவதுடன், தொடர்புடைய | முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது |

| | | |
|---|---|---|
| மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரகாரம் வரவு மீதிக்கிடையில் ரூபா 444,761 ஆன வித்தியாசம் காணப்பட்டதுடன் 2004 ஆண்டிற்கு முன்னரிலிருந்து நிலவிவரும் இவ்விதிதியாசத்தை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்க நடவடிககை எடுத்திருக்கவில்லை. | ஆவணங்களை கண்டறிவது கடினமாகவுள்ளது. தற்போது பழைய ஆவணங்களை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ் வித்தியாசத்தை இனங்கண்ட உடனே கணக்காய்விற்கு அறிக்கையிட நடவடிக்கை எடுக்கிறேன். | திறைசேரி கணனி அறிக்கை பிரகாரம் மீதியில வித்தியாசம் இருப்பின் அவ் வித்தியாசத்தை இனங்கண்டு கணக்குகளில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2018 நவம்பர் 21 திகதிய இலக்கம் 267/2018 கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 8.2 பந்தி பிரகாரம் மேலும் அறிக்கையிட வேண்டிய நிதியல்லாத சொத்துக்கள் இருப்பின் அவற்றை சரியான முறையில் இனங்கண்டு கிரயத்தில் அல்லது கிரயத்தை இனங்காண முடியாதெனில் மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டிய போதும் 2022 திசெம்பர் 31 திகதி திணைக்களத்திற்கு சொந்தமான 05 கட்டிடங்கள், மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,000,000 ஆன 02 வாகனங்கள் மற்றும் 1.4157 ஹெக்டயார் அளவான 04 காணிகள் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து மோடார் வாகனங்களையும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் நீதிமன்ற அமைச்சிற்கு சொந்தமான KD 1857 மற்றும் KD 1874 கொண்ட 02 மோடார் வண்டிகளையும் ஒப்படைக்குமாறு கோரியுள்ளதுடன், குறித்த ஒருமைப்பாடு கிடைத்த பின்னர் கணக்கீடு செய்யப்படும். வடக்கு தெற்கு நட்பு செவன கலாசார மத்திய நிலையத்தின் காணியின் உரிமையை ஒப்படைக்குமாறு கோரி பிரதேச செயலாளர் மிஹின்தலே இற்கு கோரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளது. ஏனைய காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முடிவடைந்தவுடனே சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படும். | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லா சொத்துக்களின் இனங்கண்ட கிரயத்தை அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது கணக்கீடு செய்ய வேண்டும் |
| (ii) | கூட்டுத் தொகை ரூபா 1,210,000 இற்கு மதிப்பிடப்பட்ட 02 வாகனங்களின் பெறுமதி ரூபா 210,000 தொகை குறைத்து ரூபா 1,000,000 என கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ் இரண்டு வாகனங்களின் காலம் 5 ஆண்டுகளை விஞ்சி இருக்காத காரணத்தால் மதிப்பீட்டுப் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினுள் 47 நடன கலைஞர்களுடன் கூடிய நடனக் குழுவொன்று இருக்கையில் வெளித்தரப்பு 28 நடன கலைஞர்களுக்கு ரூபா 285,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இக் கலைஞர்களின் திறமையை கவனிக்கும் போது அவர்களில் சிலர் திறமையாவது ஒரு நடன பாரம்பரியத்திற்கு மாத்திரமே. அதன் பிரகாரம் நடனங்களை உருவாக்கும் போது, அதன் அலங்காரத்தை பேணிக் கொள்ள வேண்டுமெனில் கூடியளவு கலைஞர்கள் தேவைப்படுகின்றனர். அதன் போது அரச நடனக் குழுவிற்கு வெளியில் கலைஞர்களின் சேவையை பெற்றுக் கொள்ள நேரிடுகின்றது. | திணைக்களத்தினுள் இருக்கின்ற கலைஞர்களின் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டியதுடன் அவர்களின் சேவையை பெற்றுக் கொள்ள வேண்டும். |

### 2.2 மிகை செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குருந்திரைப்படம் விழாவிற்கு மதிப்பிட்ட செலவை விஞ்சி 05 உருப்படிகளிற்காக கூட்டுத் தொகை ரூபா 381,241 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போது காணப்பட்ட விலைகள் ஒப்பீட்டு ரீதியாக அதிகரித்ததன் மீது செலவு அதிகரித்துள்ளது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டு எல்லையினுள் செலவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்று பிரகாரம் 05 செலவு விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 2,275,864 ஆன மீதி காண்பிக்கப்பட்ட போதும் அப் பொறுப்புக்களிற்கு மேலதிகமாக 2023 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்கில் 2022 ஆண்டிற்குரிய 10 செலவு | 2022 ஆண்டு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேடு தயாரிக்கும் போது, அதற்குரிய தகவல்களை அனைத்து உள்ளக பிரிவுகளிலிருந்து பெற்றுக் கொண்டதுடன், அதன் போது திணைக்களத்திற்கு கிடைத்திருந்த பட்டியல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது. | அனைத்துப் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

விடயங்களின் கீழ் கூட்டுத் தொகை ரூபா 8,841,820 செலுத்தப்பட்டு இருந்தது. இதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ரூபா 6,565,956 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5, 4.6 உப பிரிவு மற்றும் 2019 ஜூன் 27 திகதிய இலக்கம் 5/2019 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3(உ) மற்றும் 4 ஆம் பந்தி | 05 ஆண்டு காலத்தை விஞ்சியுள்ள சேவையை விட்டுச் சென்ற 13 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 204,039 ஆன கடன் மீதி மற்றும் இனங்காணாத 06 அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 23,923 ஆன கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற அலுவலர்களில் 04 பேர்களின் வதிவு பற்றி பிரதேச செயலக பிரிவு ஊடாக வினவப்பட்டுள்ளது. மூவர் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன. தொடரந்தும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இனங்கண்ட அலுவலர்கள் தொடர்பாக மேலும் தகவல்கள் தேடப்படுகின்றது. | தாபன விதிக் கோவை ஏற்பாடுகள் மற்றும் தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### (i) அதிகாரபூர்வமற்ற கொடுப்பனவு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜோன் த சில்வா அரங்கு கட்டம் - 1, ஆண்டு 03 தாமதமொன்றுடன் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு கட்டிடத்தை ஒப்படைத்திருந்த போதும் தாமதக் கட்டணமாக ஒப்பந்ததாரரிடம் இருந்து அறவிட்ட | ஸ்ரீ பாலீ கன்ஸ்ரக்ஷன் நிறுவனத்தினால் செலுத்திய ரூபா 38,658,733.68 ஆன இடைக்கால பட்டியல் சமர்பித்தவுடன் அம் மொத்த தொகைக்கும் ரிக்விஷன் | ஒப்பந்ததாரருக்கு மீண்டும் செலுத்திய தாமதக் கட்டணத்தை அறவிட |

| | | |
|---|---|---|
| ரூபா 38,658,734 தொகையை சரியான அங்கீகாரம் மற்றும் நியாயமான தகவல்களை உறுதி செய்து கொள்ளாது மீண்டும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இத் தொகையை செலுத்த உரிய அதிகாரபூர்வ மற்றும் அங்கீகாரமின்றி இரண்டாம் கட்ட ஏற்பாட்டுத் தொகையிலிருந்து ரூபா 8,512,971 வழங்கப்பட்டிருந்தது. | பத்திரம் விநியோகிக்கப்பட்ட போதும் பொது வைப்புக் கணக்கிலுள்ள ரூபா 30,145,763.01 தொகையை கழித்துக் கொண்ட பின்னர் எஞ்சிய ரூபா 8,512,970.67 தொகையை 2019 வரவு செலவுத் திட்டத்தால் ஒதுக்கிய ரூபா 700 மில்லியன் தொகையிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருந்த போதும், அச் செயல் நடவடிக்கை திட்டத்தின் ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ள எதிர்பார்த்த செயற்பாடுகளை காண்பிக்கையில் அதற்குரிய பௌதீக இலக்குகளை காண்பித்திருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இல் குறிப்பிடப்படும் விதத்தில் படிவத்தில் பௌதீக இலக்குகளை காண்பிக்க குறிப்பிடாததால் அதனை உப்படுத்தாததுடன், எதிர்வரும் ஆண்டு முதல் அதனை உட்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | செயல் நடவடிக்கை திட்டத்தில் தேவையான தகவல்களை அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த விளைவு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எழுத்தாளர் உதவிக் கருத்திட்டததின் கீழ் 2022 ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட புத்தகங்களை கொள்வனவு செய்ய ரூபா 4,300,000 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 03 மொழிகளிலும் 10,313 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் கொள்வனவு செய்த புத்தகங்களில் ஆண்டினுள் 8,949 விநியோகிக்கப்பட்டு இருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக 2018 ஆண்டிற்கு முன்னரிலிருந்து 2021 ஆண்டு வரை கொள்வனவு செய்த 6914 புத்தகங்கள் 2022 திசெம்பர் 31 | 2022 ஆண்டிற்கு முன்னர் புத்தகங்களை விநியோகிப்பது தொடர்பாக சரியான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்காததால் நிகழ்காலத்தில் இருந்து மேற்குறிப்பிட்ட முறைமையின் கீழ் புத்தகங்கள் விநியோகிகக்ப்படுகின்றது. 2022 ஆண்டில் புத்தக களஞ்சிய இடமாற்றமொன்று நிகழ்ந்ததுடன், அந்த புத்தகங்களை மீண்டும் அடுக்கிக் கொள்ளும் வரை தற்காலிகமாக புத்தகங்ளை விநியோகிப்பது இடைநிறுத்தப்பட்டது. நூலக கோரிக்கையும் பல | திட்டமிட்டவாறு கொள்வனவு செய்த புத்தகங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியளவில் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தினுள் காணப்பட்டன. | வகையாகையால் புத்தகங்களை விநியோகிக்கும் போது ஒரே வகையான புத்தகங்கள் பெறுமளவு எண்ணிக்கை விநியோகிக்கப்படுவதில்லை. எழுத்தாளர் உதவிக் கருத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் புத்தகங்கள், விற்பனைக்காக விநியோகிக்கப்படுவதில்லை. | |

### 3.3 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அல்லாத சொத்துக்களாக ரூபா 1,382,824,759 தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையில் நிதியல்லாத சொத்துக்களை அறிவிக்கும் செயலாற்றுகையின் கீழ் ரூபா 958,588,668 தொகை அதாவது ரூபா 424,236,091 தொகை குறைவாக அறிக்கையிடப்பட்டிருந்தது.<br>மேலும், 30 – 100 இற்கிடையிலான சதவீதமாக காட்டப்பட்ட அறிக்கையிடல் முன்னேற்றம் சரியானதில்ல என அவதானிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் காட்டியிருந்த நிதி அல்லாத சொத்துக்களின் கூட்டுத் தொகை சரியானதாவதுடன், செயலாற்றுகை அறிக்கையில் நிதி அல்லாத சொத்து அறிக்கையிடும் செயலாற்றுகையின் கீழ் தாமதத் தவறினால் ரூபா 343,105,266.24 தொகையும், ரூபா 80,875,034.90 தொகை மற்றும் ரூபா 255,790 ஆன நிதி அல்லாத சொத்துக்கள் உள்ளடங்கியில்லாததுடன், நகழ் செயலாற்றுகை அறிக்கையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றுகை அறிக்கையில் தகவல்கள் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த நாடக அரங்கு நவீனமயப்படுத்தல் (செலவு விடயம் 206-2-3-15-2104)** | | |
| (அ) | மொத்த ஒப்பந்த தொகையிலிருந்து 20 சதவீதமான ரூபா 311 மில்லியன் முற்பணமாக செலுத்தியிருந்த போதும், தற்போது பூர்த்தி செய்துள்ள நிர்மாண அளவு ரூபா | நிர்மாணப் பணிகளிற்காக நடாத்தப்படும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இது தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு | ஒப்பந்த பிரகாரம் நிர்மாணங்களை உரியவாறு செய்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 86 மில்லியன் மாத்திரம் என கடிதக் கோவை பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | அறவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இக் கருத்திட்டத்தை 2022 திசெம்பர் 09 அளவில் பூர்த்தி செய்து ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2023 ஆண்டு ஏப்ரல் அளவிலும் திருத்த வேலைகளை பூர்த்தி செய்ய குறித்த ஒப்பந்ததாரர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இக் கருத்திட்டத்தை 2022 திசெம்பர் 09 திகதி பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டிய போதும், ஒப்பந்ததாரரின் கோரிக்கையை கவனத்திற் கொண்டு மதியுரை சேவை நிறுவனத்தினால் 2023.04.30 வரை கருத்திட்ட காலத்தை நீடித்துள்ளதுடன், எதிரிகாலத்தில் இது தொடர்பாக மதியுரை சேவை நிறுவனத்தினால் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஒப்பந்தம் பிரகாரம் உரிய திகதியில் திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | ஒப்பந்த காலத்தினுள் நவீனமயமாக்கல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாத காரணத்தால் பெறுமளவு நடனக்காரர்களுக்கு அவர்களின் பயிற்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமை, நடனங்களை நடாத்த முடியாததால் வருமானம் ஈட்டும் நடவடிக்கை தடைப்படல் காரணத்தால் அரசாங்க வருமானமும் இழக்கப்பட்டிருந்தமை பாரிய நட்டமாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக எதிர்பார்த்த வாறு இக் கருத்திட்டத்தின் பணிகளை பூர்த்தி செய்ய இயலாது போனதுடன், இந் நிர்மாணப் பணிகளை விரைவில் முடிவுறுத்த தேவையான செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிர்மாணத்தை பூர்த்தி செய்து அரங்கை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான 1.4157 ஹெக்டயாரான 04 காணிகளின் உரிமையை உறுதி செய்யவதற்கான ஆவணங்கள் திணைக்களத்திடம் இல்லாதிருந்ததுடன் காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வடக்கு தெற்கு நட்பு செவன கலாசார மத்திய நிலைய காணி உரிமையை சுவீகரித்து தருமாறு கோரி 2023.04.27 திகதிதாக பிரதேச செயலாளர், மிஹின்தலே இற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏனைய காணிகளின் உரிமையை திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கான | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கடமைகள் பூர்த்தியான உடனே சொத்துக்களை கணக்கீடு செய்யவும், அது பற்றி கணக்காய்விற்கு அறிக்கையிடவுமுள்ளது. | |

**3.6 அரச உத்தியோகத்தரின் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 முதல் 893 வரையான பிரமாணங்கள் மற்றும் 612 ஆவது அதிகாரத்தின் மீதான அரச உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய 52 உத்தியோகத்தர்கள் கடந்த ஆண்டு இனங்கண்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைகள் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் CA/1/1//12/27/4(i) மற்றும் 2023.04.11 திகதிய கடிதம் மூலம் பிணை அறவிட வேண்டிய எல்லை மற்றும் முறைமைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில் பிணை அறவிடுவதற்குரிய சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | நிதிப்பிரமாணம் மற்றும பிணைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் 2011 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை நிரப்புவதற்கு 2023 மே 30 ஆம் திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்குமாறு கோரி பல முறை கோரிக்கை சமர்ப்பித்துள்ளதுடன், இலக்கம் DCA/02/02 மற்றும் 2023.04.06 திகதியுடையதாக மீண்டும் பொது நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அது தொடர்பாக கணக்காய்விற்கும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 28 ஆகக் காணப்பட்ட சிரேஷ்ட மட்ட அங்கீகார பதவியணியில் 15 அதாவது 54 சதவீதம் வெற்றிடமாக காணப்பட்டது. பல வருட காலமாக வெற்றிடமாக காணப்படும் கணக்காளர் பதவியும் இதில் அடங்குகின்றது. | பதவியணியின் வெற்றிடம் தொடர்பாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இலக்கம் DCA/02/01/02-02 மற்றும் 2023.03.11 திகதியும், பொது நிர்வாக அமைச்சிற்கு இலக்கம் DCA/02/02 மற்றும் 2023.04.06 திகதியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவும் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | சிரேஷ்ட மட்டத்தில் அத்தியவசியமான பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |